# 6. விலைகளும் கூலிகளும்

## 6.1 விலைகள்

சில நிருவகிக்கப்பட்ட விலைகளில் அதிகரிப்புக்கள் காணப்பட்டபோதும் 1997 காலப்பகுதியில் பணவீக்கம் பெருமளவிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு உள்நாட்டு நுகர்வுப் பொருட்களினதும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களினதும் மேம்பட்ட வழங்கல்களும் மிதமான நாணய விரிவாக்கத்திலிருந்து தோன்றிய குறைவடைந்த கேள்வி அழுத்தமுமே முக்கிய காரணங்களாகும். உள்நாட்டு வேளாண்மை மீட்சியடைந்தமையின் காரணமாக உள்நாட்டுப் பொருட்களின் வழங்கலும் மேம்பாடடைந்தது. அத்துடன் வெங்காயம், உருளைக்கிழங்கு, மற்றும் மிளகாய் என்பன மீதான உரிமத் தேவைப்பாடுகள் 1996 இல் அகற்றப்பட்டதன் பின்னர் இறக்குமதி செய்யப்பட்ட நுகர்வுப்பொருட்களின் கிடைப்பனவு மேம்பாடடைந்தது. மேலும் தெரிவு செய்யப்பட்ட நுகர்வு விடயங்களுக்கு தற்காலிகத் தீர்வைத் தளர்த்தல்களும், குறைப்புக்களும் வழங்கப்பட்டமையும் பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்த உதவின. மேற்குறிப்பிட்ட காரணிகளின் சாதகமான தாக்கம் 1997 ஓகத்தில் கோதுமை மாவின் நிருவகிக்கப்பட்ட விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு அதன் விளைவாக பாணின் விலைகளில் ஏற்பட்ட உயர்வு, 1997 செத்தெம்பரில் மின்வலு மீதான தீர்வைகளின் மேல் நோக்கிய திருத்தம் 1997 யூனில் சிகரட்டுக்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவற்றினால் ஓரளவிற்கு எதிரீடு செய்யப்பட்டது. இவ்வாண்டில் டொலருக்கு எதிராக ஏறத்தாள 7 சதவீதத்தினால் ரூபா தேய்வடைந்தமையும் இறக்குமதி விலைகளில் மேல் நோக்கிய அழுத்தத்தை ஏற்படுத்தியது.

1997 இல் பொது விலை மட்டத்தின் அதிகரிப்பு வீதம் வீழ்ச்சியடைந்தது. இது அனைத்து முக்கிய கூட்டு விலைக் குறிகாட்டிகளிலும் பிரதிபலித்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண், பணவீக்கத்தின் அலுவல்சார் அளவீடு என்பனவற்றின்படி நுகர்வோர் விலைகளின் அதிகரிப்பு, 1996 இன் 15.9 சதவீதத்திலிருந்து 1997இல் 9.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணிலும் பார்க்க பரந்தளவு பிரதேசத்தினை உள்ளடக்கிய பாரிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது நுகர்வோர் விலை அதிகரிப்புக்கள் 1996 இன் 14.7 சதவீதத்திலிருந்து 1997 இல் 7.1 சதவீதத்திற்கு குறைந்து விரைவான வீழ்ச்சியைக் காட்டியது. மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணில் பிரதிபலிக்கப்பட்டவாறு, தொடக்கச் சந்தை மட்டங்களில் விலைகளில் ஏற்பட்ட ஆண்டுச் சராசரி அதிகரிப்பு 1996 இன் 20.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1997 இல் 6.9 சதவீதமாக இருந்தது. உட்கிடை மொத்த தேசிய உற்பத்திச் சுருக்கியில் பிரதிபலிக்கப்பட்டவாறு பொருளாதாரத்தில் பொதுவான விலை மட்டம் 1996 இன் 12.2 சதவீதத்திலிருந்து 1997 இல் 8.5 சதவீதத்திற்கு குறைவடைந்தது. அதே வேளை, நுகர்வோர் நிதி மற்றும் சமூகப் பொருளாதார அளவீடு 1996/ 97 இன் முதலாவது சுற்றின் நுகர்வுக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு கொழும்பு மாவட்டத்திற்காக மத்திய வங்கியினால் கணிக்கப்பட்ட புதிய நுகர்வோர் விலைச் சுட்டெண் 1997 இல் 7.3 சதவீதமான பணவீக்க வீதத்தினைக் காட்டியது.

1997 காலப்பகுதியில் விலை நடத்தை வழமையான பருவகால தன்மைகளைப் பின்பற்றியதாக இருந்தது. ஆண்டின் முதற் காலாண்டுப்பகுதியில் விலை அதிகரிப்புக்கள் மெதுவானதாகக் காணப்பட்டதுடன் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் முக்கிய (பெரும்போக) நெல் அறுவடைக் காலத்துடன் தொடர்புபட்டதான பெப்புருவரி மற்றும் மாச்சு மாதங்களில் வீழ்ச்சியைப் பதிவு செய்தது. சிறுபோக (யால) அறுவடைக் காலமான ஓகத்திலிருந்து ஒத்தோபர் வரையான காலப்பகுதியிலும் விலைகளில் மெதுவான போக்குக் காணப்பட்டது. எனினும் வழமைக்கு மாறாக காணப்பட்ட பாரிய, நீண்ட மழை வீழ்ச்சியின் விளைவாக, 1997 இன் இறுதி இரு மாதங்களிலும் விலைகளில் உயர்வு காணப்பட்டது. இதன் விளைவாக கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் (முன்னைய ஆண்டின் தொடர்பான மாதத்தின் சுட்டெண்ணுடன் ஒப்பிடுவதன் மூலம் அளவிடப்பட்டது) புள்ளிக்குப்புள்ளி அதிகரிப்பு சனவரியின் 16.7 சதவீதம் கொண்ட உயர்ந்த மட்டத்திலிருந்து ஒத்தோபரில் 6.5 சதவீதத்திற்கு குறைவடைந்து, நவெம்பருக்குப் பின்னர் மாற்றத்திற்குட்பட்டு, ஆண்டின் இறுதியில் 10.7 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. நவெம்பரிலும் திசெம்பரிலும் காணப்பட்ட கடுமையான மழைவீழ்ச்சி காய்கறிப் பயிர்களுக்கு பெரும் சேதங்களை விளைவித்ததுடன் சந்தைக்கான அரிசி பதனிடலையும் பாதித்தது.

**அட்டவணை 6.1**

ஆண்டுச் சராசரி விலை மாற்றங்கள் (%)

| ஆண்டு | கொநுவிசு | கொபெநுவிசு | மொவிவிசு | மொதேஉசு |
|---|---|---|---|---|
| 1980 | 26.1 | - | 33.7 | 18.2 |
| 1981 | 18.0 | - | 17.0 | 20.6 |
| 1982 | 10.8 | - | 5.5 | 10.2 |
| 1983 | 14.0 | - | 25.0 | 14.7 |
| 1984 | 16.6 | - | 25.6 | 17.4 |
| 1985 | 1.5 | - | -15.2 | 0.8 |
| 1986 | 8.0 | - | -2.9 | 5.5 |
| 1987 | 7.7 | - | 13.4 | 6.8 |
| 1988 | 14.0 | - | 17.8 | 11.5 |
| 1989 | 11.6 | - | 9.0 | 9.7 |
| 1990 | 21.5 | 24.6 | 22.2 | 20.0 |
| 1991 | 12.2 | 11.5 | 9.2 | 11.2 |
| 1992 | 11.4 | 9.4 | 8.8 | 10.0 |
| 1993 | 11.7 | 8.4 | 7.6 | 9.5 |
| 1994 | 8.4 | 4.8 | 5.0 | 9.4 |
| 1995 | 7.7 | 3.9 | 8.8 | 8.3 |
| 1996 | 15.9 | 14.7 | 20.5 | 12.3 |
| 1997 | 9.6 | 7.1 | 6.9 (அ) | 8.5 (அ) |

(அ) தற்காலிகமானவை

மூலங்கள் : குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

## கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்

1997 இல் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் மெதுவான அதிகரிப்பு உணவு, எரிபொருளும் வெளிச்சமும், பல்வகை விடயங்கள் என்பனவற்றின் விலைகளில் ஏற்பட்ட மெதுவான வளர்ச்சியைப் பிரதிபலித்தது.

1996 இன் 83 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் சுடடெண்ணில் ஏற்பட்ட பொதுவான அதிகரிப்பில் 81 சதவீதத்திற்கு உணவு விலைகள் பங்களித்தன. இவ்வாண்டில் உணவு விலைகளில் ஏற்பட்ட பொதுவான அதிகரிப்பு 10.9 சதவீதமாக அமைந்து 1996 இல் பதிவு செய்யப்பட்ட 19.2 சதவீதத்தினைவிட மிக மெதுவானதாகக் காணப்பட்டது. 1996 இல் பல திருத்தங்களுக்கு உட்பட்ட கோதுமை மாவின் விலை ஒகத்தில் கி.கி. ரூ. 16.95 இலிருந்து கி.கி ரூ. 18.95 இற்கு மேலும் உயர்த்தப்பட்டது. இதன் விளைவாக பாணின் விலை (450 கிறாம்) ஏறத்தாழ ஒரு ரூபாவினால் அல்லது 13 சதவீதத்தினால் உயர்வடைந்தது. எனினும் முக்கிய பண்டமான அரிசியின் விலை முன்னைய ஆண்டின் 20 சதவீதத் திற்கு மேற்பட்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 11 – 12 சதவீத அதிகரிப்பிற்குள் கட்டுப்படுத்தப்பட்டது. இவ்வாண்டில் நெல் உற்பத்தி 9 சதவீதத்தினால் உயர்வடைந்தது. பொதுவாக, 1996 இனைப் போன்றே தானிய உற்பத்தி 1997 இன் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அதிகரிப்பில் ஏறத்தாள 30 சதவீதத்திற்குப் பங்களித்தது. 1996 இல் 50 சதவீதத்திற்கும் கூடுதலான அதிகரிப்பினைக் கொண்டிருந்த தெங்கு விலைகள் 1997 இல் ஏறத்தாள 13 சதவீதத்தினால் அதிகரித்தன. சமையல் எண்ணெய்யின் இறக்குமதிகள் மீது வழங்கப்பட்ட தீர்வைச் சலுகைகள், குறைவடைந்த உலக விலைகள் என்பனவற்றின் விளைவாக, இவ்வாண்டுக் காலத்தில் தேங்காயெண்ணெயின் விலைகள் சிறிதளவு வீழ்ச்சியடைந்தன. 1997 ஒகத்துவரை விதிக்கப்பட்ட தாழ்ந்த இறக்குமதித் தீர்வையின் விளைவாக சீனியின் விலை ஏறத்தாள 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு போன்ற முக்கிய துணை உணவுப் பயிர்களின் விலைகளில் வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டமைக்கு உரிமத் தேவைப்பாடுகள் இன்றி சந்தையில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட் கள் பெருமளவு குவிந்திருந்தமையே முக்கிய காரணமாகும். எனினும் ஆண்டின் இறுதியில் காய்கறிகளின் விலைகள் மிகக்கூடுதலாக

**அட்டவணை 6.2**


கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்
**(1952=100)**

| விடயம் | நிறைகள் | சராசரிச் சுட்டெண் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | | புள்ளிக்குப் புள்ளி சதவீத மாற்றம் | | 1997 இன் அதிகரிப்பிற்கான உதவு தொகை (%) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1996 | 1997 | 1996 | 1997 | திசெ. 1996 | திசெ. 1997 | |
| எல்லா விடயங்களும் | 100.0 | 1,906.7 | 2,089.1 | 15.9 | 9.6 | 16.8 | 10.7 | 100 |
| பண்டவகைப்படி | | | | | | | | |
| உணவு | 61.9 | 2,107.6 | 2,336.9 | 19.2 | 10.9 | 20.7 | 13.3 | 81 |
| உடை | 9.4 | 821,8 | 844.0 | 2.2 | 2.7 | 3.4 | 1.4 | 1 |
| எரிபொருளும் வெளிச்சமும் | 4.3 | 3,591.6 | 3,752.8 | 8.1 | 4.5 | 7.3 | 4.7 | 4 |
| வாடகை | 5.7 | 109.8 | 109.8 | - | - | - | - | - |
| பல்வகை | 18.7 | 1,994.7 | 2,157.8 | 10.8 | 8.2 | 9.3 | 4.7 | 14 |

மூலம் : குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

உயர்வடைந்தமைக்கு மழையினால் பயிர்கள் சேதமடைந்தமையே காரணமாகும். உண்மையில் மரக்கறிகள் மட்டும் 1997 இன் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் பொதுவான அதிகரிப்பில் 30 சதவீதத்திற்கு மேற்பட்ட பங்கிற்கு வகைகூறின.

வரைபடம் 6.1
கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்
(1952 = 100)




ஆடைகள் வகையில், விலைகள் 1996 இன் 2.2 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1997 இல் 2.7 சதவீதத்தினால் உயர்வடைந்தன. இறக்குமதித் தீர்வையின்றி, புடவை இறக்குமதிகள் கணிசமானளவிற்கு தாராளமயமாக்கப்படுவதாக நவெம்பர் வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப் பட்டபோதும் இவ்வாண்டில் முழுமையான தாக்கமும் உணரப்படவில்லை. 1997இல் எரிபொருள் மற்றும் வெளிச்ச வகையின் விலைகள் 4.5 சதவீதத் தினால் உயர்வடைந்து 1996 இல் காணப்பட்ட 8.1 சதவீத அதிகரிப்பினைவிட மெதுவான அதிகரிப் பாகக் காணப்பட்டது. இவ்வகையில், 1996 செத்தெம்பரில் இடம்பெற்ற மண்ணெண்ணெயின் விலைத்திருத்தம் 1997 இல் அதன் முழுத் தாக்கத்தினையும் கொண்டிருந்தது. மின்வலு மீதான தீர்வையும் 1997 செத்தெம்பரில் உயர்த்தப்பட்டன. எனினும் விறகின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு மிதமானதாக காணப்பட்டது. எரிபொருள் மற்றும் வெளிச்சத் தொகுதி சுட்டெண்ணின் அதிகரிப்பில் 4 சதவீதத் திற்குப் பங்களித்தது.

பல்வகையில், விலைகள் 8.2 சதவீதத்தினால் உயர்வடைந்து 1996 இல் பதிவு செய்யப்பட்ட 10.8 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைவிட ஓரளவு குறைவாக இருந்தது. சிகரெட் மற்றும் குளியலறைப் பொருட்களின் அதிகரித்த விலைகள் அதேபோன்று சலவை மற்றும் பொழுது போக்குகளின் உயர்செலவு என்பன முக்கிய உதவுக் காரணிகளாக இருந்தன. பொதுவாக கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் களின் அதிகரிப்பிற்கு பல்வகை விடயங்களின் பங்களிப்பு ஏறத்தாள 14 சதவீதமாக இருந்தது.

## கொழும்புப் பெரும்பாக நுகர்வோர் விலைச் சுட்டெண்

1997இல் கொழும்புப் பெரும்பாக நுகர்வோர் விலைச் சுட்டெண் 7.1 சதவீதங்கொண்ட அதிகரிப் பினைப் பதிவுசெய்தது. இது கடந்த ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 14.7 சதவீதங்கொண்ட அதிகரிப் பில் அரைப்பங்கிற்கும் குறைவானதாகும். கடந்த காலத்தில் அவதானிக்கப்பட்டதைப்போன்று கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணிலும் பார்க்க குறைந்த அதிகரிப்பினையே தொடர்ந்தும் பிரதிபலித்தது. உண்மையில் 1996 இல் குறைக்க

**அட்டவணை 6.3**

கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச் சுட்டெண்
(சனவரி - யூன் 1989=100)

| விடயம் | நிறைகள் | சராசரிச் சுட்டெண் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | | புள்ளிக்குப் புள்ளி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 1996 | 1997 | 1996 | 1997 | திசெ. 1996 | திசெ 1997 |
| எல்லா விடயங்ளும் | 100.0 | 205.5 | 220.1 | 14.7 | 7.1 | 15.2 | 7.9 |
| பண்ட வகைப்படி | | | | | | | |
| உணவும் குடிபானமும் | 69.3 | 216.1 | 232.2 | 17.9 | 7.5 | 18.5 | 8.9 |
| குடிவகை, புகையிலை மற்றும் வெற்றிலை பாக்கு | 3.8 | 250.7 | 273.4 | 9.6 | 9.0 | 11.9 | 4.2 |
| வீடமைப்பு | 8.9 | 109.8 | 109.9 | 0.1 | 0.1 | - | 0.2 |
| எரிபொருளும் வெளிச்சமும் | 5.4 | 215.9 | 227.1 | 7.1 | 5.2 | 5.8 | 9.2 |
| ஆடையும் காலணியும் | 2.8 | 218.3 | 227.1 | 3.7 | 4.0 | 3.7 | 2.7 |
| தனியார் கவனிப்பும் நலப்பணிகளும் மற்றும் வீட்டுப் பொருட்களும் | 4.9 | 202.8 | 227.0 | 11.0 | 11.9 | 8.6 | 10.9 |
| போக்குவரத்தும் தொடர்பூட்டலும் | 2.8 | 181.8 | 195.0 | 8.4 | 7.3 | 16.0 | 0.4 |
| பலவகை | 2.1 | 173.8 | 179.2 | 6.7 | 3.1 | 6.2 | 1.5 |

மூலம்: குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

**சிறப்புக்குறிப்பு 4**

## உள்ளார்ந்த பணவீக்கத்தின் அளவீடு ஒன்று

தொகை மதிப்புப் புள்ளி விபரத் திணைக்களத் தினால் கணிப்பிடப்பட்ட அலுவல்சார் விலைச் சுட்டெண்ணான கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் இலங்கையில் பணவீக்கம் அளவிடப்படுகின்றது. தொகை மதிப்புப் புள்ளி விபரத் திணைக்களத்தினால் கணிப்பிடப்படும் கொழும்புப் பெரும்பாக நுகர்வோர் விலைச் சுட்டெண்ணும் பண வீக்கத்தினை அளவிடுவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது. ஏனைய முக்கிய குறிகாட்டிகளாவன மத்திய வங்கியினால் கணிப்பிடப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியும் மொத்த விற்பனவு விலைச் சுட்டெண்ணுமாகும்.

விலைகளைத் தாழ்வாகவும் உறுதியான மட்டத்திலும் பேணுவதே நாணயக் கொள்கையின் முதன்மைக் குறிக்கோளாகும். உண்மையில் அனைத்து விலைகளும் சந்தையில் முழுமையாகத் தீர்மானிக்கப்பட வேண்டியதோடு கட்டுப்படுத்தப் படாத அத்தகைய விலைகளின் உறுதிப்பாடானது பொதுவான பேரண்டப் பொருளாதார உறுதிப் பாட்டினதும் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் நாணயக் கொள்கையின் பயன்தரு தன்மையினதும் பிரதிபலிப்பாகும். விலை மாற்றத்துக்காக நிரந்தரமானதும் மாறுபடுவதுமான மூலகங்கள் காணப்படுகின்றன. எனவே பயன்தரு கொள்கை உருவாக்கத்துக்காக அளவிடப்பட்ட பணவீக்கச் சுட்டெண்ணில் இந்த இரு மூலகங்களையும் ஆக்கக் கூறுகளாகப் பிரித்துக்காட்டுவது அத்தியா வசியமானதாகின்றது. இதன்படி மூலவிலைச் சுட்டெண் களில் பிரதிபலிக்கப்பட்ட வெளிப்படும் பணவீக்கத்துக்கு எதிராக உள்ளார்ந்த பணவீக்க த்தினை அல்லது மைய பண வீக்கத்தினை பெற்றுக் கொள்வதற்காக விலைச் சுட்டெண்களி லிருந்து தற்காலிக அதிர்ச்சிகளின் தாக்கங்களை நீக்கிவிடுவது அவசியமாகின்றது. உள்ளார்ந்த பணவீக்கத்தினை அளவிடும்போது வழங்கல் பக்கத்திலான அதிர்ச்சிகளை இல்லாதொழிப்ப தற்காக நாடுகள் பல்வேறுபட்ட முறைகளைப் பயன்படுத்துகின்றன.[1] உதாரணமாக ஐக்கிய அமெரிக்க நாடுகளில் நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் துணை மூலகங்களான உணவு மற்றும் வலு என்பனவற்றின் விலைகள் நீக்கப்படுகின்றன. அடிக்கடி மாறுபடும் தன்மை யினையும் தவறுகளையும் கொண்டுள்ளமை யினால் உணவு விலைகள் நீக்கப்படுகின்ற வேளையில் அரசாங்கத்தினால் வலுவிற்கான விலைகள் தீர்மானிக்கப்படுகின்றமை யினாலும் அதன் காரணமாக பொருளாதாரத்தில் கேள்வித் தாக்கத்தோடு பெருமளவு தொடர்புபடாது காணப்படுகின்றமையினாலும் வலுவினது விலைகள் நீக்கப்படுகின்றன. ஐக்கிய இராச்சியத் தில் உள்ளார்ந்த வீதத்தினைப் பெறுவதற்காக வேண்டி வெளிப்படும் பணவீக்கத்திலிருந்து ஈட்டு வட்டிச் செலவுகள் நீக்கப்படுகின்றன.

**அட்டவணை 1**

**நிர்வகிக்கப்பட்ட விலைத் திருத்தங்கள் - 1996-1997**

ரூ.

| விடயம் | அலகு | இருந்து | இற்கு | திகதி |
|---|---|---|---|---|
| கோதுமைமா | 1கிகி | 11.95 | 12.45 | ஏப். 1996 |
| பாண் | 450கிறாம்(துண்டு) | 5.00 | 5.25 | ஏப். 1996 |
| பேருந்துக்கட்டணம் | ஏறத்தாள 15% | | | யூலை .1996 |
| கோதுமைமா | 1கிகி | 12.45 | 13.95 | யூலை 1996 |
| பாண் | 450கிறாம்(துண்டு) | 5.25 | 5.75 | யூலை 1996 |
| சிகரெட் | 25-50 சத அதிகரிப்பு | | | யூலை 1996 |
| தெங்குச்சாராயம் | | 175.00 | 190.00 | யூலை 1996 |
| கோதுமைமா | 1கிகி | 13.95 | 16.65 | ஓகத். 1996 |
| பாண் | 450கிறாம்(துண்டு) | 5.75 | 6.75 | ஓகத். 1996 |
| மண்ணெண்ணெய் | 1லீற்றர் | 9.50 | 10.40 | செத். 1996 |
| சிகரெட் | 25 சத அதிகரிப்பு | | | யூன் 1997 |
| கோதுமைமா | 1கிகி | 16.95 | 18.95 | ஓகத் 1997 |
| பாண் | | 6.75 | 7.75 | ஓகத்.1997 |
| மின்வலு | | | | செத்.1997 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

இலங்கையில் பல நுகர்வுப் பொருட்களின் விலைகள் அதாவது கோதுமை மா, பாண், மண்ணெண்ணெய், மின்சாரம், போக்குவரத்துக் கட்டணங்கள் சிகரட்டுக்கள் மற்றும் வெறியக் குடிவகைகள் அரசாங்கத்தினால் நிருவகிக்கப்பட்டு தீர்மானிக்கப்படுகின்றன. நிருவகிக்கப்பட்ட விலைகளைக் கொண்ட இந்த

[1] கூட்டு விலைச் சுட்டெண்ணின் துணை மூலகங்களின் அகற்றலை அல்லது மாற்றீடு செய்வதனை உட்படுத்தும் நீக்கல் அல்லது மாற்றீட்டின் மூலம் சீராக்கம் செய்தலே பொதுவாகப் பயன்படுத்தப்படும் முறையாகும். இதனது நடத்தை உள்ளார்ந்த பணவீக்கப் போக்கிலிருந்து மாறுபடுவதாக முடிவு செய்யப்பட்டுள்ளது. செவ்வொழுங்கு முறைகள் எனக் குறிப்பிடப்படும் ஏனைய முறைகள் தீவிர விலை அசைவுகள் வழங்கல் அதிர்ச்சிகளையே முதன்மையாகப் பிரதிபலிக்கின்றன என்ற வாதத்தின் அடிப்படையில் குறித்துரைக்கப்பட்ட அடிமட்டத்திற்கு அப்பால் விலை மாற்றங்களை நீக்குவதை உட்படுத்துகின்றன. உள்ளார்ந்த விதமாக நிறையேற்றப்பட்ட நடுவூடான விலை மாற்றங்களைப் பயன்படுத்தும் முறையானது உள்ளார்ந்த பணவீக்கத்தை அளவிடும் மாற்று முறையாகும்.

விடயங்களுள் கோதுமைமா, பாண், மண்ணெண்ணெய் மற்றும் புகையிலை என்பன கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் அதி கூடிய நிறையினை (கிட்டத்தட்ட 16 சதவீத இணைந்த நிறை) கொண்டுள்ளன. எனவே இந்த விடயங்களின் விலைகள் கடந்த இரண்டு ஆண்டுகளிலும் பல தடவைகள் திருத்தப்பட்டன.


**அட்டவணை 2**

முனைப்பான மற்றும் உள்ளார்ந்த பணவீக்க வீதங்கள்
சன 1996 – திசெம் 1997. 1997

| | | முனைப்பான பணவீக்க வீதம் | உள்ளார்ந்த பணவீக்க வீதம் |
|---|---|---|---|
| 1996 | சனவரி | 8.4 | 11.7 |
| | பெப்புருவரி | 9.3 | 12.0 |
| | மாச்சு | 10.6 | 12.8 |
| | ஏப்பிறல் | 11.7 | 13.4 |
| | மே | 12.2 | 13.1 |
| | யூன் | 12.8 | 13.0 |
| | யூலை | 13.0 | 12.5 |
| | ஓகத்து | 13.9 | 12.6 |
| | செத்தெம்பர | 14.8 | 13.0 |
| | ஒத்தோபர் | 15.3 | 13.1 |
| | நவெம்பர் | 15.5 | 13.1 |
| | திசெம்பர் | 15.9 | 13.5 |
| 1997 | சனவரி | 16.4 | 14.0 |
| | பெப்புருவரி | 16.7 | 14.2 |
| | மாச்சு | 16.7 | 14.2 |
| | ஏப்பிறல் | 16.4 | 13.7 |
| | மே | 15.8 | 13.1 |
| | யூன் | 14.7 | 11.7 |
| | யூலை | 13.9 | 11.0 |
| | ஓகத்து | 12.9 | 10.1 |
| | செத்தெம்பர் | 11.7 | 9.2 |
| | ஒத்தோபர் | 10.6 | 8.3 |
| | நவெம்பர | 10.0 | 8.0 |
| | திசெம்பர் | 9.6 | 7.7 |

மூலம்: குடி மதிப்புப்புள்ளி விபரத் திணைக்களம்
இலங்கை மததிய வங்கி

உள்ளார்ந்த பணவீக்கத்தின் மதிப்பீட்டைப் பெறுவதில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணுக்கான கூடையிலிருந்து இந்த விடயங்கள் நீக்கப்பட வேண்டியதோடு எஞ்சிய கூடையின் விலை மாற்றங்கள் உள்ளார்ந்த பண வீக்கத்தின் அளவீடு ஒன்றாகப் பயன்படுத்தப்





படலாம். 1994 இன் பிற்பகுதியில் பாண், கோதுமைமா மற்றும் மண்ணெண்ணெய் என்பனவற்றின் நிருவகிக்கப்பட்ட விலைகளின் கடுமையான குறைப்பின் தாக்கமானது சீராக்கம் செய்யப்படாத கொழும்பு நுகர்வோர், விலைச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறு பணவீக்க வீதத்தில் 1996 இன் ஆரம்ப காலப்பகுதியிலும் உணரப்பட்டதுடன் சீராக்கம் செய்யப்படாத வீதம் உள்ளார்ந்த வீதத்திற்குக் கீழாகக் காணப்பட்டது. (அட்டவணை 2 வரைபடம் 1) இதேபோன்று 1996 ஏப்பிறலிருந்து செயற்படுத்தப் பட்ட மேல் நோக்கிய விலைத் திருத்தங்களுக்கான சீராக்கத்தின் பின் 1996 யூலையிலிருந்து உள்ளார்ந்த பணவீக்க வீதம் வெளிப்படும் பணவீக்க வீதத்திற்குத் தாழ்வாகக் காணப்பட்டது.

எனினும் மேலே குறிப்பிடப்பட்டது மையப் பணவீக்கத்தின் சரியான அளவீடு ஒன்று அல்ல. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் நலிவுகள் பலவற்றை அது மரபுரிமையாகப் பெற்றுள்ளதோடு மைய பண வீக்கத்தின் பொருத்தமான சுட்டெண் ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்காக மேலும் செம்மைப்படுத்தல்களை தேவைப்படுத்துகின்றன.

ப்பட்டிருந்த இவ்விரு சுட்டெண்களுக்குமிடையிலான சமமற்ற தன்மை நிறைவேற்றல் அமைப்பிலுள்ள வேறுபாடுகளின் காரணமாக 1997 இல் விரிவடைந்தது. குறிப்பாக காய்கறிகளின் விலைகளில் ஏற்பட்ட மிகக் கூடியளவு அதிகரிப்பு கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச் சுட்டெண்ணிலும் பார்க்க கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் மீது பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியமைக்கு பின்னைய சுட்டெண்ணில் காய்கறிகளுக்கு உயர்ந்தளவு நிறை வழங்கப்பட்டமையே உண்மையாகும்.

கொழும்புப் பெரும்பாக நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் உணவு மற்றும் குடிபானம் வகையின் விலைகள் 7.5 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தன. இது கடந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 17.9 சதவீத அதிகரிப்பிலும் பார்க்க கணிசமானளவு குறைவானதாகும். குடிவகை, புகையிலை, வெற்றிலை மற்றும் பாக்கு (9.0 சதவீதம்) எரிபொருளும் வெளிச்சமும் (5.2 சதவீதம்) போக்குவரத்தும் தொடர்பூட்டலும் (7.3 சதவீதம்) பல்வகைகள் (3.1 சதவீதம்) என்பனவற்றின் விலைகளும் மெதுவாகவே இருந்தன. மெதுவான உயர் அதிகரிப்புக்கள் ஆடைகள் மற்றும் காலணிகள், தனியார் கவனிப்பு, நலப்பணிகள், வீட்டு உபயோகப் பொருட்களும் பணிகளும் என்பவற்றில் பிரதிபலித்தன. ஆடைகள் மற்றும் காலணிகள் ஆகிய வகைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு 1996 இன் 3.7 சதவீதத் துடன் ஒப்பிடுகைளில் 1997 இல் 4.0 சதவீதமாக இருந்த வேளையில் தனியார் கவனிப்பு மற்றும் நலப் பணிகள், வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் பணிகள் வகை 1996 இன் 11.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1997 இல் 11.9 சதவீதமாக இருந்தது.

**வரைபடம் 6.2**
**கொழும்பு பெரும்போக நுகர்வோர் விலைச் சுட்டெண்**
**(சனவரி-யூன் 1989 = 100)**




## கொழும்பு மாவட்டத்திற்கான நுகர்வோர் விலைச்சுட்டெண்

கொழும்பு மாவட்டத்திற்கான நுகர்வோர் விலைச்சுட்டெண் 1996/97 நுகர்வோர் நிதி மற்றும் சமூகப் பொருளாதார அளவீட்டின் முதலாவது சுற்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் மத்திய வங்கியினால் கணிக்கப்பட்டது. சுட்டெண்ணிற்கான நுகர்வோர் கூடை கொழும்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டில் உள்ளடக்கப்பட்ட குடும்ப அலகுகளின் கீழ் மட்டத்திலுள்ள 40 சதவீதத்தினரின் (வருமான நிலையின்படி) நுகர்வு மாதிரிகளைப் பயன்படுத்தி தெரிவு செய்யப்பட்டது.

சுட்டெண்ணிற்கான நிறைகளைக் கணிக்கையில் அளவீட்டினால் குறிப்பிடப்பட்ட நீண்டகாலம் பாவிக்காத அனைத்து நுகர்வு விடயங்கள் (மொத்தமாக 325) கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டன. இவ்விடயங்கள் உணவு, உடை எரிபொருளும் வெளிச்சமும், வாடகை மற்றும் பல்வகை விடயங்கள் என ஐந்து துணை வகைகளாகப் பிரிக்கப்பட்டன. இவை ஒவ்வொன் றிற்கும் துணைச் சுட்டெண்கள் கணிக்கப்பட்டன. உணவு மிகப் பெரும் வகையாக விளங்கி சுட்டெண்ணில் 60 சதவீதத்திற்கு வகை கூறியதெனினும் தற்பொழுது 72 சதவீதத்தினைக் கொண்டிருக்கும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணிலுள்ள உணவுக் கூறுகளிலும் பார்க்க மிகக் குறைவாகவே இருந்தது.

1996 இன் ஒத்தோபரிலிருந்து திசெம்பர் வரையான காலப்பகுதியின் சராசரி விலைகளைப் பயன்படுத்தி சுட்டெண்ணின் அடிப்படைப் பெறுமதி பெறப்பட்டதுடன் அதன் காரணமாக சுட்டெண்களின் அடிப்படை 1996 ஒத்தோபர் திசெம்பர் (=100) ஆக இருந்தது. புறக்கோட்டை, கோமாகம, கங்வெல்ல, அவிசாவளை மற்றும் மொரட்டுவை ஆகிய ஐந்து சந்தைகளிலிருந்து கிழமையில் ஒருமுறை அனைத்து உணவு விடயங்களினதும் மாதத்திலொருமுறை உடை மற்றும் பலசரக்கு விடயங்களினதும் விலைகள் சேகரிக்கப்படுகின்றன. கோதுமைமா, பாண், மின்வலு, சிகரெட், குடிவகை, வாயு போன்ற நிருவாக ரீதியில் ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட விடயங்களுக்கான விலைத் தரவுகள் விலைகள் மாற்றமடையும் நேரங்களில் சேகரிக்கப்பட்டன.

சுட்டெண் 1996 சனவரியிலிருந்து 1997 திசெம்பர் வரையான காலப்பகுதிக்கு கணிக்கப் பட்டது. இது 1997 இல் 7.3 சதவீதம் கொண்ட பணவீக்கத்தினைக் காட்டியதுடன் இது கொழும்பு

**அட்டவணை 6.4**

**தெரிந்தெடுக்கப்பட்ட உணவு விடயங்களின் சில்லறை விற்பனை விலைகள் (தீவு முழுவதும்)**

| விடயம் | அலகு | விலைகள் ரூபாயில் | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | | 1995 | 1996 | 1997(அ) | 1996 | 1997(•) |
| அரிசி (சாதாரண புழுங்கல்) | கி.கி. | 16.11 | 20.80 | 22.68 | 29.1 | 9.0 |
| பாண் (450 கிறாம்) | இறாத்தல் | 3.81 | 6.05 | 7.65 | 58.8 | 26.5 |
| முட்டை (சாதாரணம்) | ஒன்று | 3.28 | 3.40 | 4.47 | 3.7 | 31.5 |
| தேங்காய் (நடுத்தர அளவு) | காய் | 5.45 | 8.82 | 9.83 | 61.8 | 11.5 |
| காய்கறி | | | | | | |
| பாகற்காய் | கி.கி. | 26.70 | 26.16 | 32.47 | 5.5 | 15.3 |
| முட்டைக்கோவா | " | 24.87 | 23.68 | 27.79 | -4.8 | 17.4 |
| கரட் | | 33.60 | 33.59 | 39.13 | -0.1 | 16.5 |
| போஞ்சி | " | 30.01 | 29.81 | 35.43 | -0.7 | 18.9 |
| லீக்ஸ் | " | 33.44 | 32.10 | 34.39 | -4.0 | 7.1 |
| உருளைக்கிழங்கு | " | 47.57 | 41.76 | 34.15 | -12.2 | -18.2 |
| சின்ன வெங்காயம்(நடுத்தரம்) | " | 40.34 | 49.81 | 49.54 | 23.5 | -0.5 |
| செத்தல் மிளகாய் (தரம் 1) | " | 122.28 | 139.90 | 99.85 | 14.4 | -28.6 |
| கடல் மீன் | | | | | | |
| கலவல்ல | " | 128.69 | 135.03 | 153.79 | 4.9 | 13.9 |
| மலட் | " | 92.87 | 101.77 | 117.76 | 9.6 | 15.7 |
| குறுள்ளோ | " | 72.63 | 84.91 | 91.27 | 16.9 | 7.5 |
| சாளை | " | 53.39 | 60.61 | 68.92 | 13.5 | 13.7 |

(அ) தற்காலிகமானவை                                                    மூலம்: குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்


பெரும்பாக நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் பிரதிபலிக்கப்பட்ட பணவீக்க வீதமான 7.1 சதவீதத்திற்கு அணித்தாக இருந்த தெனினும் கொழும்பு நுகர்வோர்விலைச் சுட்டெண்ணினால் பிரதிபலிக்கப்பட்ட 9.6 சதவீதத்திலும் பார்க்க குறைவாகவே இருந்தது. நுகர்வு மாதிரிகள் மாற்றமடை கின்றமையின் காரணமாக குறைந்த வீதங்கள் நிறையமைப்பில் வேறுபாடுகளைப் பிரதி பலிக்கின்றன. நிருவகிக்கப்பட்ட விலை விடயங்கள், காய்கறிகள், மீன் என்பன புதிய சுட்டெண்ணில் குறைந்த நிறையையே கொண்டுள்ளன.

எனினும் புதிய சுட்டெண்ணின் மூலமாகப் பெறப்பட்ட பெறுபேறுகள் மிகவும் கவனமாக விளக்கப்பட வேண்டியனவாகும். ஏனெனில் நுகர்வோர் கூடை, 1996 ஒத்தோபர் திசெம்பர் காலப்பகுதியினை உள்ளடக்கிய நுகர்வோர் நிதி அளவீட்டின் முதலாவது சுற்றின் பெறுபேறுகளை மாத்திரம் பயன்படுத்திக் கணிக்கப்பட்டதனால் பயன்படுத்தப்பட்ட குடும்ப அலகுகளின் மாதிரியின் அளவும் சிறிதேயாகும். குறிப்பிட்ட தொடர்பான காலப்பகுதியில் நுகர்வோர் செலவின மாதிரிகளின் பருவகாலத் தன்மை அதாவது நத்தார் காலத்தில் நுகர்வு அதிகரித்தது. மற்றும்1996 இல் வரட்சியின் காரணமாக காய்கறிகளின் விலைகளில் ஏற்பட்ட அதிகளவு உயர்வு புதிதாக கணிக்கப்பட்ட நுகர்வோர் கூடையை பாதித்திருக்கக் கூடும். அளவீட்டின் மற்றைய 3 சுற்றுக்களினதும் நுகர்வோர் செலவினத்தரவு தற்பொழுது செய்முறைப்படுத்தப்பட்டு வருவதுடன் இத் தரவுகள் தயாரிக்கப்பட்டதும் புதிய சுட்டெண்கள் விரிவாக்கப்பட்டு மேலும் முன்னேற்றப்படும்.

## மொத்த விற்பனை விலைச் சுட்டெண்

1997இல் மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணின் ஆண்டு அதிகரிப்பு 6.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இது கடந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 20.5 சதவீத அதிகரிப்பில் மூன்றிலொன்றேயாகும். சுட்டெண்ணில் குறிப்பிடத்தக்க நிறையைக் கொண்டுள்ள தேயிலையின் விலைகளில் ஏற்பட்ட மெதுவான அதிகரிப்பு வீதம் இறப்பர் மற்றும் தெங்கின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவே

வரைபடம் 6.3
மொத்த விற்பனை விலைச் சுட்டெண்
(1974 = 100)



## அட்டவணை 6.5

### மொத்த விற்பனை விலைச் சுட்டெண்
### (1974=100)

| விடயம் | நிறைகள் | சராசரிச் சுட்டெண் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | | புள்ளிக்குப் புள்ளி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 1996(அ) | 1997 (அ) | 1996 | 1997(அ) | திசெ. 1996 | திசெ. 1997(அ) |
| எல்லா விடயங்களும் | 100.0 | 1,145.1 | 1,224.3 | 20.5 | 6.9 | 18.1 | 6.6 |
| பண்ட வகைப்படி | | | | | | | |
| உணவு | 67.8 | 1,040.7 | 1,132.2 | 30.1 | 8.8 | 27.1 | 8.1 |
| வெறிக்குடிவகை | 2.9 | 1,176.0 | 1361.3 | 7.4 | 15.8 | 24.3 | - |
| புடவை, காலணிகள் | 4.0 | 626.5 | 633.8 | 8.0 | 1.2 | 2.4 | - |
| தாள் உற்பத்திகள் | 1.4 | 1,063.4 | 902.9 | 10.7 | -15.1 | -23.5 | -0.7 |
| இரசாயன, இரசாயன உற்பத்திகள் | 5.2 | 660.9 | 717.3 | 3.7 | 8.5 | 6.3 | 8.4 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 6.4 | 1,374.9 | 1,528.2 | 4.6 | 11.2 | 15.4 | - |
| உலோகமல்லா உற்பத்திகள் | 1.8 | 2,238.3 | 2,387.6 | 5.6 | 6.7 | 3.8 | 24.1 |
| உலோக உற்பத்திகள் | 0.9 | 784.4 | 806.1 | 11.1 | 2.8 | 7.0 | 2.1 |
| போக்குவரத்துக் கருவிகள் | 0.8 | 908.6 | 937.3 | 7.3 | 3.2 | 2.7 | 1.2 |
| மின்கருவிகளும் வழங்கல்களும் | 1.0 | 767.7 | 800.6 | 2.0 | 4.3 | 3.3 | 4.3 |
| பொறிகள் | 1.3 | 604.3 | 596.1 | 3.5 | -1.4 | -3.4 | 1.3 |
| எரிபொருளும் வெளிச்சமும் | 1.8 | 2,410.1 | 2,694.8 | 13.1 | 11.8 | 17.8 | 17.1 |
| பல்வகை | 4.8 | 2,729.5 | 2,582.5 | 10.0 | -5.4 | -3.1 | -2.7 |
| துறைவகைப்படி எண் I | | | | | | | |
| உள்நாட்டு வகை | 50.3 | 994.5 | 1,059.1 | 11.7 | 6.5 | 12.6 | 8.0 |
| இறக்குமதி வகை | 27.2 | 862.8 | 933.5 | 11.6 | 8.2 | 9.4 | 3.7 |
| ஏற்றுமதி வகை | 22.5 | 1,822.4 | 1,944.5 | 40.4 | 6.7 | 31.1 | 6.5 |
| துறைவகைப்படி எண் II | | | | | | | |
| நுகர்வுப் பொருட்கள் | 75.3 | 1,093.0 | 1,190.4 | 25.4 | 8.9 | 24.0 | 8.2 |
| இடைநிலைப் பொருட்கள் | 20.5 | 1,309.2 | 1,324.6 | 10.3 | 1.2 | 4.5 | -1.0 |
| முதலீட்டுப் பொருட்கள் | 4.2 | 1,273.1 | 1,342.7 | 5.6 | 5.5 | 3.7 | 18.7 |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

மொத்த விற்பனை விலைச் சுட்டெண் வீழ்ச்சியடைய முக்கிய காரணங்களாகும். 1996 இல் 36 சதவீதத்திலிருந்து 48 சதவிதம் வரையான வீச்சினைக் கொண்ட அதிகரிப்புக்களைப் பதிவு செய்த மூன்று உயர வகைத் தேயிலைகளினதும் விலைகள் 1997 இல் 13 சதவீதத்திலிருந்து 20 சதவீத வீச்சினால் உயர்வடைந்தன. கடந்த ஆண்டில் 80 சதவீத்தினால் அதிகரித்தது. தெங்கின் விலைகள் 0.6 சதவீதங் கொண்ட சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவு செய்த வேளையில் தேங்காயெண்ணெயின் விலை 0.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. கடந்த ஆண்டு மொத்த விற்பனை விலைச் சுட்டெண்களின் மொத்த அதிகரிப்பில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட பங்கிற்கு தேயிலையும் தெங்கும் வகை கூறின. மேற் குறிப்பிட்ட வற்றிற்குப் புறம்பாக, பல்வகை வகைகளின் வீழ்ச்சிக்கு முக்கிய **காரணமாக இருந்த** இறப்பர் விலைகளில் **ஏற்பட்ட கணிசமான** வீழ்ச்சியும் **பொதுவான** மொத்த **விற்பனை** நிலையில் **கீழ் நோக்கிய** அழுத்தத்தினை தோற்றுவித்தன. பொறிகள், மற்றும் தாள் உற்பத்தி வகைகளில் பதிவுசெய்யப்பட்ட விலை வீழ்ச்சிகளும் புடவை மற்றும் அணியும் ஆடைகள், உலோக உற்பத்திகள், போக்குவரத்துக் கருவிகள் மற்றும் எரிபொருளும் வெளிச்சமும் ஆகிய வகைகளின் மெதுவான போக்குகளும் சுட்டெண்ணின் இப் பொதுவான தன்மைக்கு உதவின.

1997இல் உணவு வகைகளின் விலைகள் 8.8 சதவீதத்தினால் அதிகரித்து கடந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 30.1 சதவீத அதிகரிப்பிலும் பார்க்க குறிப்பிடத்தக்களவிற்கு குறைவாக இருந்தது. தேயிலை விலைகளில் காணப்பட்ட மெதுவான போக்கு, தெங்கு விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பன தவிர திறந்த சந்தை நெல்லின் விலைகளில் ஏற்பட்ட வளர்ச்சி 1996 இன் 30 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவிலிருந்து 1997 இல் ஏறத்தாள 8 சதவீதத்திற்கு மிகக் கூடுதலாக மெதுவடைந்தமை, கோதுமைத் தானியத்தின் இறக்குமதி விலையில் ஏற்பட்ட குறைப்பு, செத்தல் மிளகாய் போன்ற துணை உணவுப் பயிர்களின் விலைகளில் ஏற்பட்ட **வீழ்ச்சி** என்பனவும் உணவு வகையின் **விலைகளினது** அதிகரிப்பு மெதுவான வேகத்தில் காணப்பட்டமைக்கு பொறுப்பாக இருந்தன.

புடவை மற்றும் காலணி, உலோக உற்பத்திகள், போக்குவரத்துக் கருவிகள் மற்றும்

எரிபொருளும் வெளிச்சமும் வகைகளின் விலை அதிகரிப்புக்கள் இவ்வாண்டில் மெதுவான போக்கினை அடைந்து கடந்த ஆண்டின் 8.0 சதவீத, 11.1 சதவீத, 7.3 சதவீத மற்றும் 13.1 சதவீத அதிகரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் முறையே 1.2 சதவீத, 2.8 சதவீத, 3.2 சதவீத, 11.8 சதவீத அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. தாள் உற்பத்திகள், பொறிகள் மற்றும் பல்வகை வகைகளின் விலைகள் கடந்த ஆண்டின் 10.7 சதவீத, 3.5 சதவீத, 10.0 சதவீத அதிகரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் முறையே 15.1 சதவீத, 1.4 சதவீத, 5.4 சதவீத வீழ்ச்சிகளைப் பதிவு செய்தன.

எனினும், வெறியக் குடிவகைகள், இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகள், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் மின்னியல் துணைக்கருவிகள் என்பனவற்றின் விலைகள் முன்னைய ஆண்டினைப் போன்றே 1997 இலும் இரு மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்தன. வளமாக்கி விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் இரசாயனத் தொகுதியின் சுட்டெண்ணை உயர்த்தின. 1996 செத்தெம்பரில் ஏற்பட்ட பெற்றோலிய விலைகளினது அதிகரிப்பின் முழுத்தாக்கமும் நடைமுறையாண்டில் உணரப்பட்ட வேளையில் சீமெந்து விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு உலோகமல்லா உற்பத்திகளின் சுட்டெண் உயர்வதற்குப் பங்களித்தது.

துறைவாரியாக, உள்நாட்டு, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி தொகுதிகளுக்கான துணைச் சுட்டெண் குறைந்த அதிகரிப்புக்களையே காட்டின. உள்நாட்டு மற்றும் இறக்குமதித் தொகுதியினது சுட்டெண்களின் அதிகரிப்புக்கள் முன்னைய ஆண்டின் 11.7 சதவீதம் மற்றும் 11.6 சதவீதங்களிலிருந்து முறையே 6.5 சதவீதத்திற்கும், 8.2 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தன. ஏற்றுமதிக்கான துணைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட உயர்வு, கடந்த ஆண்டின் 40.4 சதவீதத்திலிருந்து 6.7 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது.

முடிவுப் பயன்பாட்டுப் பகுப்பின்படி, நுகர்வு மற்றும் இடைநிலை வகைகளுக்கான துணைச் சுட்டெண்களில் ஏற்பட்ட அதகரிப்பு வீதம் கடந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 25.4 சதவீதத்திலிருந்தும் 10.3 சதவீதத்திலிருந்தும் 8.9 சதவீதத்திற்கும் 1.2 சதவீதத்திற்கும் கணிசமாக வீழ்ச்சியடைந்தது. எனினும், முதலீட்டு வகையின் விலை அதிகரிப்பு 5.5 சதவீதமாக அமைந்து முன்னைய ஆண்டின் மட்டமான 5.6 சதவீதத்திற்கு அண்மித்து காணப்பட்டது.

## பிரதேச விலை வேறுபாடுகள்

1997 இல் கொழும்பு, கண்டி, அநுராதபுரம் மற்றும் மாத்தறையிலுள்ள சந்தைகளில் முக்கிய உணவு விடயங்களின் சராசரி சில்லறை விலைகளையும் கொழும்புச் சந்தைகளுடன் ஒப்பிடுகையில் அவற்றின் வேறுபாடுகளையும் அட்டவணை 6.6 காட்டுகிறது. குறைந்தளவிற்குப் பழுதடையும் தன்மையைக் கொண்ட அரிசி, வெங்காயம், உருளைக்கிழங்கு, செத்தல் மிளகாய், முட்டை, தேங்காய், போன்ற விடயங்களில் சார்பு ரீதியில் குறைந்த வேறுபாடும் மரக்கறி, மீன் போன்ற விரைவில் பழுதடைந்துவிடும் விடயங்களில் உயர்ந்தளவு வேறுபாடுகளையும் கொண்டதாக 1996 இன் வேறுபாடுகளை ஒத்த தன்மையே 1997 இலும் அவதானிக்கப்பட்டது. மரக்கறிகளின் விலைகள் கொழும்புடன் ஒப்பிடுகையில் பிரதேச மையங்களில் குறைவாக இருந்தமைக்கு அவை உற்பத்திப் பிரதேசங்களுக்கு அண்மையில் இருந்தமையே காரணமாக இருந்தவேளையில் மீன், வெங்காயம், முட்டை என்பனவற்றின் விலைகள் கொழும்பில் பொதுவாக குறைவாகவே இருந்தன. மீண்டும், முக்கிய பிராந்திய உற்பத்தித் தன்மைகளுடன் ஒத்துச் செல்லும் விதத்தில் அளவில் சிறிய (சம்பா) அரிசியினதும் மிளகாயினதும் விலைகள் அநுராதபுரத்தில் மிகக் குறைவாக இருந்த வேளையில் புழுங்கல் அரிசியின் விலை மாத்தறையில் மிகக் குறைவாக இருந்தது. மலையக காய்கறிகளின் விலைகள் கண்டியில் மிகக் குறைவாக இருந்த வேளையில் மீனின் விலை இச் சந்தையில் மிக உயர்வாக இருந்தது.

வரைபடம் 6.4 தெரிந்தெடுக்கப்பட்ட சந்தைகளில் விலைகளின் பருவகால நடத்தைகளை எடுத்துக் காட்டுகின்றது. மேம்பட்ட உள்நாட்டு உற்பத்திகளின் விளைவாக அரிசி விலைகளின் பருவகால நடத்தை 1996 இலும் பார்க்க1997 இல் மிகத் தெளிவாக அவதானிக்கப்பட்டது. பல அரிசி உற்பத்தி பிரதேசங்களுக்கு அண்மையிலுள்ள அநுராதபுரம் சந்தையில் பெப்புருவரி ஏப்பிறல் (பெரும்போக அறுவடை) காலப்பகுதியிலும் மீண்டும் ஓகத்து செத்தெம்பர் (சிறுபோக அறுவடை) காலப்பகுதியிலும் விலைகள் வீழ்ச்சியடைந்ததுடன் பருவகாலத் தன்மைகள் சார்புரீதியில் மிகத் தெளிவாகத் தெரிந்தன. எனினும் அவரைக்கான விலைகளின் பருவகால நடத்தை 1996 இலும் பார்க்க 1997 இல் குறிப்பிடத்தக்கதாக இல்லை. கொழும்பில் இப் பண்டங்களுக்கான விலைகள் ஆண்டு முழுவதும் உயர்வாகவே இருந்த வேளையில் கண்டியில் விலைகள் மேயில் மிகக் குறைந்த

## அட்டவணை 6.6

### தெரிந்தெடுக்கப்பட்ட சந்தைகளில் தெரிந்தெடுக்கப்பட்ட உணவு விடயங்களின் சராசரி சில்லறை விலைகள் 1997 (அ)


| விடயம் | விலை (ரு. /கி. கிறாமுக்கு) | | | | கொழும்பிலிருந்து வேறுபடும் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | கொழும்பு | கண்டி | மாத்தறை | அநுராதபுரம் | கண்டி | மாத்தறை | அநுராதபுரம் |
| சம்பா | 29.75 | 30.27 | 28.84 | 27.32 | 1.7 | -3.1 | -8.2 |
| சிவப்பு பச்சை | 25.69 | 25.17 | 22.33 | 24.51 | -2.0 | -13.1 | -4.6 |
| அவரை | 42.01 | 32.98 | 34.28 | 33.54 | -21.5 | -18.4 | -20.2 |
| கோவா | 29.93 | 21.14 | 26.21 | 23.66 | -29.4 | -12.4 | -20.9 |
| கத்தரிக்காய் | 32.82 | 20.56 | 19.63 | 20.55 | -37.4 | -40.2 | -37.4 |
| பூசனிக்காய் | 21.06 | 17.00 | 15.85 | 15.73 | -19.3 | -24.7 | -25.3 |
| சின்ன வெங்காயம் | 46.64 | 51.71 | 46.91 | 47.50 | 10.9 | 0.6 | 1.8 |
| பெரிய வெங்காயம் | 24.75 | 25.83 | 25.34 | 27.16 | 4.4 | 2.4 | 9.7 |
| உருளைக்கிழங்கு | 35.77 | 34.14 | 28.95 | 37.00 | -4.6 | -19.1 | 3.4 |
| செத்தல் மிளகாய் | 97.97 | 98.09 | 89.95 | 85.17 | 0.1 | -8.2 | -13.1 |
| கலவல்ல | 130.92 | 167.29 | 163.71 | 159.26 | 27.8 | 25.0 | 21.6 |
| குறுள்ளே | 69.69 | 88.32 | 85.31 | 91.70 | 26.7 | 22.4 | 31.6 |
| முட்டை (ஒன்றுக்கு ரூபா) | 4.08 | 4.29 | 4.34 | 4.25 | 5.1 | 6.4 | 4.2 |
| தேங்காய் (ஒன்றுக்கு ரூபா) | 11.46 | 10.18 | 11.51 | 10.10 | -11.2 | 0.4 | -11.9 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 6.4**

**தெரிந்தெடுக்கப்பட்ட பண்டங்களின் மாதாந்த விலைகள்**



மட்டத்திற்கு வீழ்ந்தன. அனைத்துச் சந்தைகளிலும் சின்ன வெங்காயத்தின் விலை முன்னைய ஆண்டினைப் போன்று பெப்புருவரி மாச்சுக் காலப்பகுதியில் தாழ்ந்த விலைகளுடனும் யூனின் பதிவுசெய்யப்பட்ட உச்ச விலையுடனும் கூடிய மிகத்துல்லியமான பருவகாலத் தன்மையை எடுத்துக்காட்டின.

கொழும்பிற்கும் அநுராதபுரம், மாத்தறை ஆகிய இரு சந்தைகளுக்குமிடையில் சின்ன வெங்காயத்தின் விலையிலுள்ள வேறுபாடுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மிகக் குறுகியதாக இருந்தது. முட்டை தொடர்பான விலைகளின் வேறுபாடுகளும் கொழும்பு, அநுராதபுரம் சந்தைகளுக்கிடையில் குறிப்பிடத்தக்களவிற்கு குறுகிக் காணப்பட்டன. மூன்று பிரதேச சந்தைகளிலும் தேங்காயின் விலைகள் கொழும்புச் சந்தைக்கு அண்மித்ததாகக் காணப்பட்டதுடன் மாத்தறையின் விலைகள் கொழும்புச் சந்தை விலைகளைவிட மிகச் சிறிதளவு விஞ்சிக் காணப்பட்டன. வழங்கல்களின் விலைகள் தொடர்பான மேம்பட்ட சந்தைத் தகவல்கள் வேறுபாடுகளைச் சமப்படுத்துவதற்கு வலுவாக உதவின.

## 6.2 கூலிகள்

பீ.சீ பெரேராவை தலைவராகக் கொண்டு 1994இல் நியமிக்கப்பட்ட சம்பள மீளாய்வு ஆணைக் குழுவின் விதந்துரைப்புக்களை ஏற்றுக் கொண்டதன் மூலம் அரசதுறை சம்பளங்களின் பாரிய சீர்திருத்தத்திற்கான முதலாவது நடவடிக்கையினை அரசு 1997இல் மேற்கொண்டது. 20 ஆண்டுகளுக்கு மேலான காலத்தில் அரசதுறை ஊதியங்களை முழுமையாக மீளாய்வு செய்தது இதுவே முதற் தடவையாகும். இதன் விளைவாக அரசதுறையின் அனைத்து வகை ஊழியர்களும் (1995 இல் கணிசமான கூலி உயர்வு பெற்ற பாடசாலை ஆசிரியர்கள் நீங்கலாக) கணிசமான பெயரளவு கூலி அதிகரிப்புக்களை பெற்றனர். (எதிர்காலத்தில் மேலும் சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும் என்ற உறுதிமொழியுடன்) இதனால் 1996 இன் மட்டங்களுடன் ஒப்பிடுகையில் இவ் வகைகளுக்கும் பாடசாலை ஆசிரியர்களுக்குமான உண்மைக் கூலிகள் மிதமாக அதிகரித்தன. நன்கமைந்த தனியார் துறையில் பல்வேறு கூலிச் சபைகளுக்கு ஏற்புடையதான ஆகக் குறைந்த கூலிகள் மேல் நோக்கி திருத்தியமைக்கப்பட்டன. எனினும் சராசரியாக நன்கமைந்த தனியார்துறையின் உண்மைக் கூலிகள் மோசமடைந்தமையினைக் காட்டின. நன்கமையாத்துறையை பொறுத்தமட்டில் கட்டிட நிருமாணம், நெல், தேயிலை, தெங்குப் பயிர்ச்செய்கை என்பன போன்ற பெரும்பாலான முயற்சிகளுக்கான பெயரளவுக் கூலிகள் கணிசமாக அதிகரித்து உண்மைக் கூலிகளில் மேம்பாடொன்றினைத் தோற்றுவித்துள்ளதனை தற்காலிகத்தரவுகள் வெளிப்படுத்துகின்றன.

### அரசதுறை

சம்பள மீளாய்வு ஆணைக்குழுவின் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தியதைத் தொடர்ந்து அரசதுறை சம்பள அளவுத் திட்டங்களில் பாரிய மாற்றமொன்று மேற்கொள்ளப்பட்டது. புதிய

**அட்டவணை 6.7**

**கூலிவீதச் சுட்டெண்கள்**
**(திசெம்பர் 1978 = 100)**

| விடயம் | பெயரளவு | | உண்மையான | | 1997 இன் சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | 1996 | 1997(அ) | 1996 | 1997(அ) | பெயரளவு | உண்மையான |
| 1. அரச ஊழியர்கள் | | | | | | |
| மத்திய அரச ஊழியர்கள் | 818.2 | 906.5 | 103.0 | 104.0 | 10.8 | 1.0 |
| நிறைவேற்றுத் தரமல்லா | 757.1 | 842.9 | 95.3 | 96.7 | 11.3 | 1.5 |
| சிற்றூழியர்கள் | 878.7 | 966.7 | 110.6 | 110.8 | 10.0 | 0.2 |
| அரச பள்ளிக்கூட ஆசிரியர்கள் | 760.5 | 778.5 | 95.7 | 89.3 | 2.4 | -6.7 |
| 2. கூலி நிர்ணய சபை வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள் | | | | | | |
| அனைத்து வர்த்தகத்திலுள்ள கூலி நிர்ணய சபை | 801.7 | 849.1 | 100.7 | 97.3 | 5.9 | -3.4 |
| வேளாண்மைத் தொழிலாளர்கள் | 907.9 | 971.8 | 113.9 | 111.4 | 7.0 | -2.2 |
| கைத்தொழில், வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள் | 682.8 | 710.8 | 85.9 | 81.4 | 4.1 | -5.2 |
| பணிகளிலுள்ள தொழிலாளர்கள் | 487.2 | 487.2 | 61.3 | 55.9 | 0.0 | -8.8 |

(அ) தற்காலிகமானவை.

மூலங்கள் : தொழில் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

சம்பள அளவுத் திட்டங்களானது அடிப்படைக் கூலிகளையும் படிகளையும் ஒன்றிணைப்பதனை இன்றியமையாததாக்குகின்றது. இம் மாற்றமானது இரண்டு கட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படும். மாதமொன்றிற்கு ஆகக் குறைந்தது ரூபா 325 என்ற நியதிக்குட்பட்டு 40 சதவீத அதிகரிப்பு 1997 சனவரி 1 இலிந்தும் எஞ்சியவை 1998 சனவரி 1 இலிருந்தும் வழங்கப்பட்டன. அதன்பின் சம்பள கட்டமைப்பில் உயர்நிலையிலிருப்போருக்கான இரண்டாம் கட்ட சம்பள அதிகரிப்பு 1998 யூலை வரையில் பின்போடப்பட்டது. அவ்வப் போதைக்கான திருத்தங்களின் காரணமாக கடுமையாகப் பாதிப்புற்றிருந்த அரசதுறைச் சம்பளங்களை ஒழுங்கு முறைப்படுத்துவதற்கான ஆணைக்குழுவின் விதந்துரைப்புக்களானது இசைவினை மீண்டும் ஏற்படுத்துவதனை குறிக்கோளாகக் கொண்டிருந்தது. இவ் விதந்துரைப்புக்களும் 1997 சனவரியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டன.

இதன் விளைவாக அரச ஊழியர்களுக்கான கூலி வீதச் சுட்டெண் 1996 இன் 3.2 சதவீத அதிகரிப்பிலும் பார்க்க அதி உயர்வாக 10.8 சதவீதத்தினால் அதிகரித்தது. 1997 இற்கான பணவீக்க வீதம் 9.6 சதவீதமாக காணப்படுவதனால் இது உண்மைக் கூலிகளில் ஆகக் குறைந்தது 1 சதவீதமான மேம்பாட்டினைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றது. இது முன்னைய ஆண்டில் உண்மைக் கூலிகள் 10.7 சதவீதத்தினால் வீழ்ச்சியுற்றதற்கு முற்றிலும் நேர்மாறானதாகும். நிறைவேற்றுத் தரமல்லா அலுவலர்களின் பெயரளவு கூலிச் சுட்டெண் கடந்த ஆண்டின் 1.0 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 11.3 சதவீதத்தினால் அதிகரித்தது. இதன்படி இவ்வூழியர்களுக்கான உண்மைக் கூலிகள் 1.5 சதவீதத்தினால் அதிகரித்தன. சிற்றூழியர்களுக்கான பெயரளவுக் கூலிச் சுட்டெண் 1996இன் 6.1 சதவீத அதிகரிப்பினைத் தொடர்ந்து 10.0 சதவீதத்தினால் அதிகரித்தது. இதன்படி சிற்றூழியர் களுக்கான உண்மைக் கூலிகள் சிறிதளவால் அதிகரித்தன. 1995 சனவரியில் வழங்கப்பட்ட கணிசமான சம்பள அதிகரிப்பினைத் தொடர்ந்து மாற்றமின்றியிருந்த அரசாங்க பாடசாலை ஆசிரியர்கள் 1997 இல் 2.4 சதவீத மிதமான பெயரளவு கூலி அதிகரிப்பினைப் பெற்றனர். அரச பள்ளிக்கூட ஆசிரியர்களின் சம்பள அளவுகளிலுள்ள குறிப்பிட்ட முரண்பாடுகளை சரி செய்வது இவ்வாண்டில் பரிசீலனையின் கீழ் இருந்தது.

## தனியார்துறை

நன்கமைந்த தனியார்துறையின் கூலிகள் கூலி நிர்ணயசபைகளிலுள்ள ஆகக் குறைந்த கூலிவீதச் சுட்டெண்களின் மூலமாக கணிக்கப் படுகின்றன. 1997 இல் கூலி நிர்ணயசபைகளிலுள்ள அனைத்து வேலையாட்களுக்குமான பெயரளவுக் கூலிகள் முன்னைய ஆண்டின் 8.3 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைத் தொடர்ந்து சராசரியாக 5.9 சதவீதத்தினால் அதிகரித்தன. 1997 இல் வேளாண்மைக் கூலிகள் 1996 இன் 9.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 7.0 சதவீதத்தினால் உயர்வடைந்தன. இவ்வகைக்குள் 1996 ஒகத்தில் ரூ.83 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்த தேயிலைத் தோட்டங்களிலுள்ள தொழிலாளர்களின் ஆகக் குறைந்த நாளாந்தக் கூலி மாற்றமின்றியிருந்தது. எனினும் இறப்பர் தோட்டங்களிலுள்ள தொழிலாளர்களின் கூலிகள், இவ்வாண்டில் உயர்வடைந்தமைக்கு இத் தொழிலாளர்களுக்குக் கொடுபடவேண்டிய வாழ்க்கைச் செலவு மாறிலிகளே காரணமாகும். 1997 ஒத்தோபரில் இவ் வகைக்கான நாளாந்தக் கூலிகள் ரூ.83.22 இனை அடைந்தன. நவெம்பரிலிருந்து இறப்பர் தொழிலாளர்களின் நாளாந்தக் கூலிகளும் ரூ.83இல் நிர்ணயிக்கப்பட்டதுடன் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண்ணைப் பின்பற்றி அதிகரிக்கும் முறை நிறுத்தப்பட்டது.

1997 இல் கைத்தொழில் மற்றும் வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்களின் கூலிகள், அவை தொடர்பான கூலிச் சுட்டெண்ணினால் அளவிடப் பட்டவாறு 4.1 சதவீதத்தனால் உயர்வடைந்தது. 1996 இல் பதிவு செய்யப்பட்ட 4.8 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் இது ஒப்பிடத்தக்கதாகும். கடந்த ஆண்டில் 6.7 சதவீதத்தினால் அதிகரித்த பணிகள்துறையிலுள்ள தொழிலாளர்களின் பெயரளவுக் கூலிகள் 1997 இலும் மாற்றமின்றியிருந்தன. பத்திக் புடவை, அச்சிடல், பாதுகாப்புப் பணிகள், தேயிலை ஏற்றுமதி தெங்கு மற்றும் கண்ணாடிப் பொருட்களின் தயாரிப்பு போன்ற துணைத்துறைகளின் ஆகக் குறைந்த கூலிகள் 1997 இல் மேல் நோக்கித் திருத்தப்பட்டன.

## முறைசாராத்துறை

தற்காலிகத் தரவுகளின்படி, இவ்வாண்டில் கட்டடவாக்க நடவடிக்கைகளிலுள்ள தச்சர், கொத்தனார், தேர்ச்சியற்ற உதவியாளர் என்போரின் நாளாந்தக் கூலிகள் ஏறத்தாள 11 சதவீதத்தினால் அதிகரித்து உண்மை நியதிகளில் மிதமான முன்னேற்றத்தினைக் காட்டின. நெற் செய்கைகளில்

முக்கிய நடவடிக்கைகளுக்கான பெயரளவுக் கூலிகள் 9 ற்கும் 18 சதவீதத்திற்குமிடையில் மேம்பட்டதன் விளைவாக பெரும்பாலான நடவடிக்கைகளுக்கான உண்மைக் கூலிகள் மேம்பாடுற்றன. தேயிலைப் பயிர்ச்செய்கையில், நிலப்பண்படுத்தலுக்கான பெயரளவுக் கூலிகள் ஏறத்தாள 14 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் தேயிலை பறித்தலுக்கான கூலிகள் 11 சதவீதத்தினால் அதிகரித்தன. தேயிலைப் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட ஆகக் குறைந்த கூலிகளில் எவ்வித மாற்றமும் இல்லாத சூழலில் இது அடையப்பட்டமையானது குறிப்பிடத் தக்கதொரு அம்சமாக இருப்பதுடன் தேயிலை விலைகளின் செழிப்பினையும் பிரதிபலிக்கிறது. தெங்குப் பயிர்ச் செய்கையில் முக்கிய நடவடிக்கைகளுக்கான கூலி அதிகரிப்புக்கள் 13 சதவீதத்திற்கும் 19 சதவீதத்திற குமிடையிலான வீச்சில் காணப்பட்டன. எனினும் இறப்பர் பயிர்ச் செய்கையில் இறப்பர் பால் எடுப்பவர்களுக்கான நாளாந்தக் கூலிகள் 5 சதவீதத்தினால் மட்டும் அதிகரித்து சந்தை விலைகள் மோசமடைந்த மையைப் பிரதிபலித்தன. சில விடயங்களில், நன்கமையாத துறையில் இறப்பர் பால் எடுப்பவர்களுக்கான கொடுப்பனவுகள் பால் எடுக்கப்பட்ட லேட்டெக்சின் பெறுமதியுடன் இணைந்திருந்தன.

வேறு இடத்தில் குறிப்பிடப்பட்டவாறு, நாடு உயர்ந்தளவிற்கு வர்த்தகத்தில் தங்கியிருப்பது மற்றும் (மொ.உ.உற்பத்தியில் 70 சதவீதம்) ஏற்றுமதிப் போட்டித் தன்மையினைப் பேணுவதன் அவசியம் என்பனவற்றைக் கருத்திற் கொள்கையில் உற்பத்தியாளர் இலாபங்களுடன் கூலி அதிகரிப்புக்களை இணைக்க வேண்டியதன் அவசியம் அதிகரித்து வருகின்றது. பணவீக்கக் குறிகாட்டிகளுடன் கூலிகளை இணைக்கின்ற பரந்தளவிலான நடைமுறைப் பணவீக்கம் சார்ந்த தன்மையை அறிமுகப் படுத்துவதுடன் இது போட்டித் தன்மைகளைப் பாதித்து, கைத்தொழில் கொள்கை உற்பத்தியாக்கத்தை உயர்த்த வேண்டியவிடத்து செலாவணி மற்றும் நாணயக் கொள்கைகளை நாடுவதனை நிர்ப்பந்தித்தது. அரசாங்கம் தொழிலாளர் சாசனத்தை தயாரித்து வருகிறது. இது கூலித் தரங்களிலும் தொழிலாளர் நட்புக்களின் மீதும் வழிகாட்டல்களை விதிக்கும் எனவும் எதிர்பார்க்கிறது.

அவசரத் தீர்வுகளை வேண்டிநிற்கும் விடயங்கள்:

(அ) உயர்வான தொழில் நிலைப் பின்னணியில் புதிய தொழில் வாய்ப்புக்களை ஊக்கமிழக்கச் செய்யும் நெகிழ்ச்சியற்ற தன்மைகளைத் தொழிற்சந்தை கொண்டிருப்பதன் காரணமாக தொழில் நிலையின் நெகிழ்ச்சித் தன்மையை ஊக்குவிப்பதற்கான தேவை.

(ஆ) கூலி அதிகரிப்புக்களை உற்பத்தியாக்க இலாபத்துடனும் ஊக்குவிப்புக்களுடனும் இணைக்கப் பட்டுள்ள நெகிழ்ச்சித் தன்மையுள்ள கூலி அமைப்புக்களுடனும் இணைத்தல்.

(இ) தொழில் தருநர்களுக்கும் ஊழியர்களுக்கும் சமமான பாதுகாப்பினை வழங்கும் விதத்தில் தொழிலாளர் சட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

(ஈ) தீவிரமான போட்டிக் கொள்கையை ஊக்குவித்தல்.

வெற்றிகரமான பொருளாதார தாராளமயமாக்கலுக்கும் புதிய தொழில் வாய்ப்புக்களை ஊக்குவிப்பதற்கும் போட்டி நிலமைகளை மேம்படுத்தக்கூடிய தொழிற்சந்தை சீர்திருத்தங்கள் மிக இன்றியமையாதவை என்பது பெருமளவிற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. தொழிற்சந்தையின் வினைத்திறன்பற்றிய முழு அளவிலான ஆய்வு ஒன்று நடைபெற்று முடியும்வரை தாராளமான துணை ஒப்பந்தங்களும் பன்முகப்படுத்தலும் ஊக்குவிக்கப்படுவது சுதந்திரமான தொழிலாளர் சந்தைக்கு உதவக்கூடும்.